<u>**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**</u>

<u>**MCOP No. 598/2022 RW1**</u>

25.06.2024 எ.**<u>ம.சா.1 திரு. மணிரத்திரனம் சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

விபத்து தேதியில் ஓட்டுநர் உரிமம் எனக்கு இல்லை என்றால் சரிதான். அதன்பிறகு ஓட்டுநர் உரிமம் பெற்றேனா என்றால் பெற்றேன். 2019ம் ஆண்டு அவ்வாறு ஓட்டுநர் உரிமம் பெற்றேன். தற்போது என்னிடம் உள்ளது. விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் விளைவாக எனக்கு கண்கள் சரியாக தெரியவில்லை என்றும், காதுகள் சரியாக கேட்கவில்லை என்றும், தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையாக இருக்குமேயானால் ஓட்டுநர் உரிமமே எனக்கு வழங்கப்பட்டு இருக்காது என்றால் சரியல்ல. விபத்து வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விபத்து வழக்கில் என்னை விசாரிக்கவில்லை என்றும், விபத்தை நேரில் பார்க்காத என் தந்தை கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் மேற்படி விபத்தில் இறந்த ஏழுமலை விபத்தை ஏற்படுத்தியதாக கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த ஏழுமலையின் உடலை பிரேத விசாரணை செய்து அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாத. பிரேத பரிசோதனை அறிக்கையை மனுதாரர்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் ஏழுமலை நன்றாக மது அருந்திவிட்டு அவர் தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு அவர் மது அருந்தவே இல்லை என்றும், அவர் அருந்தி இருந்தார் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுப்பதில் இருந்து தப்பிப்பதற்காகத்தான் ஏழுமலை மது அருந்தி இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தபோது நான்

என்னுடைய இருசக்கர வாகனத்தில் தனியாகத்தான் சென்றேன். ஆனால் எதிரே வந்த இரு சக்கர வாகனத்தில் விபத்தில் இறந்த ஏழுமலை மற்றும் குணசேகரன் என்பவர் வந்தார்கள். இறந்த ஏழுமலை வேகமாக வர வாய்ப்பில்லை என்றும், நான் தான் தவறான பாதையில் வேகமாக வந்து விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க நான் கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.